திரு. இராம. அரங்கண்ணல்: தலைவர் அவர்களே, குடும்பக் கார்டுத் திட்டம் கொண்டு வந்த நேரத்தில் கணக்கு எடுக்கும் காரியம் செய்தது முன்பு இருந்த அரசு ஆகும். அதைத் திருத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு இப்போது இருக்கிற நம் சர்க்கார் அதிகாரிகள் வெளியூரிலிருந்து யாராவது சென்னைக்குக் குடிவந்து விட்டால் சென்னையில் இருக்கிற ஒரு எம்.எல்.ஏ. அல்லது கவுன்ஸிலர் ஒருவரிடமிருந்து சிபாரிசு கடிதம் வேண்டுமென்று கேட்கிறார்கள். அதற்குப் பதில், வெளியூர்களிலிருந்து வரும்போது அந்த ஊர் கிராம முன்சீப்பிடமிருந்து கையெழுத்து வாங்கி வர வேண்டுமென்ற கொள்கையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: சென்ற அரசு இருந்த நேரத்தில்தான் இந்தத் தவறே ஏற்பட்டது. அதைத் திருத்தி அமைக்கும் முறையிலே, கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்ன யோசனையை மேற்கொள்ளலாம்.

திரு. எம். எஸ். மணி: சார், இந்த மோசடி நடந்த செங்கற்பட்டு சொஸைட்டிக்கு தலைவர் யார்? அந்தந்தத் தலைவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா? அந்த சொஸைட்டி ரத்து செய்யப் பட்டதா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: அந்த சொஸைட்டியின் தலைவர் திரு. வி. கே ராமசுவாமி முதலியார். அந்த சொஸைட்டி தாற்காலிகமாகத் தடை செய்யப்பட்டது—சஸ்பெண்டு செய்யப் பட்டது. பிறகு அந்தத் தடையை நீக்கி விட்டார்கள்.

திரு. கே. விநாயகம்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலின் விளைவாக இன்னொரு உப-கேள்வி கேட்க விரும்புகிறேன். சொஸைட்டியின் தலைவர் திரு. வி. கே. ராமசுவாமி முதலியாருக்கும் இந்த மோசடிக்கும் ஏதோ சம்பந்தம் இருப்பது போல இருக்கிறது அமைச்சர் அவர்களுடைய பதில். இந்த மோசடிக்கும் அவருக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்று தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: கனம் உறுப்பினருடைய கேள்வியில்தான் அவருக்கும் அதற்கும் சம்பந்தம் இருப்பதாக தொனிக்கிறதே தவிர, அவருக்கும் அதற்கும் சம்பந்தம் இருக்கிறது என்று நான் சொல்லவேயில்லை.

* 420 Q.—THIRU S. RAMACHANDRAN : THIRU A. M. RAJA : } Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether the Government are aware of the smuggling of foodgrains through the sea surrounding Kanyakumari district; and

(b) if so, the steps taken by Government to prevent the same?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) கேரள மாநிலத்திற்கு அரபிக்கடல் வழியாக உணவு தானியங்களைக் கடத்தக்கூடும் என்பதை அரசு அறிந்துள்ளது.

1967 நவம்பர் 24]

(இ) உணவு தானியங்கள் கடத்தப்படுவதைத் தடுக்கும் பொருட்டு, இக்கடற்கரை நெடுக பல சோதனைச் சாவடிகள் நிறுவப்பட்டுள்ளன. இதுதவிர கள்ளக்கடத்தலைத் தடுக்கும் பணியாளர்களுக்கு கடல் ரோந்துப்பணிக்காக மீனளத் துறைக்குச் சொந்தமான ஒரு மோட்டார் படகும் அவர்களுக்கு அளிக்கப் பட்டுள்ளது, கடத்தல்காரர்களால் பயன்படுத்தப்படும் முறையிலே உள்ள ஐயத்திற்கிடமான அரிசி ஆலைகள், அதிகாரிகளுக்குத் தெரிவிக்காமல் வைத்துவரும் அரிசி இருப்பினைக் கண்டறியும் பொருட்டு, அடிக்கடி சோதனையிடப்படுகின்றன. அரிசி ஆலைகள் செயல்படுவதில் ஒழுங்கீனங்கள் இருப்பதாகத் தெரியவந்தால், அந்த ஆலைகள் கடுமையாகத் தண்டிக்கப்படுகின்றன. கன்னியாகுமரி-கேரள மாநில எல்லைகளுக்கு அருகிலுள்ள பகுதிகளில் புதிய அரிசி ஆலைகள் ஏற்படுத்துவதற்கு ஊக்கமளிக்கப்படுவதில்லை.

. திரு. எம். சி. பாலன் : தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தின் வழியாகக் கேரளாவுக்கு அரிசி செல்லுவதைத் தடுக்க 14 செக் போஸ்டுகள் இருக்கின்றன. கடலோரத்தின் வழியாகச் செல்லும் அரிசியைத் தடுக்க விசைப்படகுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆண்ட்டி-ஸ்மக்ளிங் போலீஸ் இலாகாவினர் இருக்கிறார்கள். இன்னும் அதேபோல டவுன் சப்ளை ஆபீசர், மாவட்ட உணவு வினியோக அதிகாரிகள் அத்தனை பேர்களும் இரவு பகலாகப் பாடுபட்டு வந்தும் குமரி மாவட்டம் வழியாக ஆயிரக் கணக்கான மூட்டைகள் கடந்து செல்லுகின்றன. அதை நானே பார்த்திருக்கிறேன். அதைத் தடுக்க தீவிர நடவடிக்கை எடுக்கும் உத்தேசம் உண்டா?

மாண்நமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினர் தனக்குத் தகவல் தெரியும் என்று சொல்லுகிறார். அதுபற்றி உடனடியாகப் பெரிய போலீஸ் அதிகாரிக்குத் தெரிவித்தால் நடவடிக்கை எடுப்பார்கள். கடத்தப்படும் செய்தியை முன்கூட்டியே தெரியப்படுத்தினால் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க அரசாங்கம் தயாராக இருக்கிறது. அப்படித் தவறு நடப்பதைத் தடுக்க கன்னியாகுமரி மாவட்ட சட்ட மன்ற உறுப்பினர் பொது ஜன நன்மைக்காக ஒரு கமிட்டி அமைத்து, குற்றவாளிகளைத் தண்டிக்க, போலீஸுக்குத் தகவல் கொடுக்க அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வ. ஜார்ஜ் : தலைவர் அவர்களே, தமிழ் நாடு நெல், அரிசி போக்குவரத்துத் தடைச் சட்டத்தின் கீழ் 5 லிட்டர் அரிசிக்குக் குறைவாக எப்பொழுதும், எந்த இடத்திற்கும் கொண்டு போவதற்கு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த உரிமை கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வழங்கப்படவில்லை. அதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, அந்த உரிமையை கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் வழங்க அரசாங்கம் பரிசீலிக்குமா?

[1967 நவம்பர் 24

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தமிழகத்தில் 10 படி அரிசி வரை எடுத்துச் செல்வதற்கு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அந்த உரிமையைக் கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் விஸ்தரிப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மு. ச. சிவசாமி : தலைவர் அவர்களே, உணவுப் பொருள் போக்குவரத்தைக் கண்காணிக்கும் பொருட்டு தற்போது இருக்கும் செக் போஸ்ட்டுகளில் கண்காணிப்பாளர்களை நிரந்தரமாகப் போடாமல் மாறி மாறி பணியாற்றும்படி ஏற்பாடு செய்ய அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தவறு ஏற்படாமல் இருக்க கனம் அங்கத்தினர் சொன்ன யோசனையை அரசு எடுத்துக் கொள்ளும்.

திரு. கே. பி. எஸ். மணி : சார், இந்த கடத்தல் குற்றங்கள் அதிகமாகிற காரணத்தால்—ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கு, தற்போது அரிசி எடுத்துச் செல்வதற்குத் தடை இருக்கிறது, அந்தத் தடை இருப்பதன் காரணமாகத்தான் கடத்தல் குற்றங்கள் அதிகமாகிறது என்று மக்கள் கருதுகிறார்கள். ஆகவே—அரிசியை ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கு எடுத்துச் செல்வதற்குள்ள தடையை அகற்ற அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : மாவட்டத்திற்கு மாவட்டம் அனுப்பலாம் என்ற முடிவுக்கு அரசாங்கமே வருமானல் கள்ளக்கடத்தல்காரர்களுக்கு இது வசதியாகப் போகும். இப்பொழுதே கேரளப் பகுதிக்கு கடத்திச் செல்லக் கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. இந்த நிலையில் அதற்குச் சாதகமாக மாவட்டத்திற்கு இடையேயுள்ள தடையை நீக்கி விட்டால் சுலபமாகக் கடத்தல் செய்ய வாய்ப்பு ஏற்பட்டு விடும்.

*421 வினு—திரு. வி. கே. கோதண்டராமன் :
திரு. பி. வேலுசாமி : } மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரிசி, மிளகு போன்ற உணவுப் பொருள்களில் கலப்படம் செய்யத் தக்க வகையில் கல், களிமண் இவைகளைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் நடத்தப்படுவது சர்க்காருக்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில், அவற்றின் மீது எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.